STC 11/2023 DW2- ஜான்சி ராணி

க/பெ மச்சராசா தேதி 27.02.2026

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :

13.12.2022 ம் தேதி புகார்தாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை நான் பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். அதன்பின்பு பதிலறிவிப்பு ஏதும் அனுப்பினேனா என்றால் இல்லை. எ.ம.சா.ஆ.2 ல் எனது கையொப்பம் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி ஆவணத்தில் சீட்டு கட்டுவோர் கையொப்பம் என்ற இடத்தில் ராணி என்று எழுதப்பட்டிருந்தது , அதற்கு முன்பு நான் ஜான்சி என்று எழுதி கொண்டேன். மேற்படி ஆவணத்தில் பெயர் என்ற இடத்தில் ராணி என்று மட்டும் தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் புகார்தாரரின் பெயரோ அல்லது அவரது மனைவியின் பெயரோ உள்ளதா என்றால் இல்லை. எதிரியின் பேரன் பேத்தி பெயர் உள்ளது. மேற்படி ஆவணமானது போலியாக என்னால் தயாரிக்கப்பட்டது என்றாலும் மேற்படி ஆவணத்திலுள்ள கையெழுத்து எதிரியின் மனைவியின் கையெழுத்து இல்லை என்றாலும் சரியல்ல. 14வது ஏல தொகை எவ்வளவு எடுத்தேன் என்றால் சுமார் 2 லட்சம் இருக்கும். நான் ரூபாய் 42,000/- யை அன்றைய தினமே கொடுத்துவிட்டேன் என்று சொல்லுவதற்கு ஆதாரமாக ஆவணங்கள் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. நான் சொல்வது போல் இது சீட்டு சம்பந்தமான பண விவாகாரங்கள் இல்லை என்றாலும் நான் எதிரியிடம் வாங்கிய கடனை திருப்பி கொடுக்காமல் ஏமாற்றி இந்த வழக்கிற்காக சீட்டு விவாகாரம் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

S.d. Jansi rani
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.G.Sathia Narayanan,B.A.B.L.,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.